முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2023-02-25
காலை
[8.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

  பக்கங்கள் : 11
  வினாக்கள் : 07

  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.6** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் கிரய நிலையத்திற்கான (Cost Centre) ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) மாணவன் (2) வெதுப்பகம் (3) பாண் (4) நோயாளி.

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வரும் தகவல்கள் பல கட்டடங்களின் வாடகை தொடர்பில் **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன : *(ரூபா)*

| கணக்கின் பெயர் | 2022 மார்ச் 31 இல் | 2021 ஏப்ரல் 01 இல் |
|---|---|---|
| முற்பணமாகச் செலுத்திய வாடகை | 25,000 | 60,000 |
| அட்டுறு வாடகை | 45,000 | 90,000 |

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது வாடகையாக ரூபா 750,000/- செலுத்தியிருந்தது.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாடகைச் செலவினமானது :

(1) ரூபா 720,000/-. (2) ரூபா 980,000/-. (3) ரூபா 985,000/-. (4) ரூபா 740,000/-.

(02 புள்ளிகள்)

**1.3** **வரையறுக்கப்பட்ட ராணி கம்பனி** பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

| | **ரூபா** |
|---|---|
| விற்பனைகள் (VAT உள்ளடக்கப்படாதது) | 3,600,000 |
| கொள்வனவுகள் (வரி விலைப்பட்டியல்களால் ஆதரிக்கப்பட்டவை) (VAT உள்ளடக்கப்படாதது) | 1,600,000 |
| விற்பனை வருமானம் (VAT உள்ளடக்கப்படாதது) | 45,000 |
| 2022 சனவரி 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு (credit) மீதி | 15,000 |

*(பொருத்தமான VAT வீதம் 8% ஆகும்.)*

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2022 மார்ச் 31 இல் VAT செலவு மீதி :

(1) ரூபா 175,000/-. (2) ரூபா 141,400/-. (3) ரூபா 156,400/-. (4) ரூபா 171,400/-.

(02 புள்ளிகள்)

**1.4** கீழ்வரும் கிரயமிடல் முறைகளைக் கருதுக :

**(a)** வேலைக் கிரயமிடல்.

**(b)** தொகுதிக் கிரயமிடல்.

**(c)** ஒப்பந்தக் கிரயமிடல்.

**(d)** செயன்முறைக் கிரயமிடல்.

மேலுள்ளவற்றில், குறிப்பான கட்டளைக் கிரயமிடல் (Specific Order Costing) முறை/ முறைகளாவன:

(1) **(d)** மாத்திரம்.

(2) **(a)** யும் **(d)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

(4) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

(02 புள்ளிகள்)

**1.5** பங்குடமை தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** பங்காளர்கள் பங்குடமையிலிருந்து சம்பளத்தைப் பெற உரித்துடையவர்கள்.

**(b)** ஒவ்வொரு பங்காளரும் பங்குடமையின் ஏடுகளையும் ஆவணங்களையும் பரிசோதிக்க உரிமை உடையவர்கள்.

**(c)** பங்காளர்கள் தாம் உள்ளிட்ட மூலதனத்திற்கான வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.

**(d)** இலாப, நட்டங்கள் பங்காளர்களிடையே சமமாகப் பகிரப்பட வேண்டும்.

மேலுள்ளவற்றில், 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 தொடர்பில் சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(a)** மாத்திரம்.

(2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(d)** யும் மாத்திரம்.

(4) **(b)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.

(02 புள்ளிகள்)

**1.6** **A** யும் **B** யும் முறையே 2 : 1 என்ற விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் பங்குடமை ஒன்றை நடத்திச் செல்கின்றனர். 2022 மார்ச் 31 இல், **C** என்பவர் பங்குடமையில் இணைந்து கொண்டதுடன் **A**, **B**, **C** ஆகியோருக்கிடையேயான பங்குடமையின் புதிய இலாப, நட்டப் பகிர்வு விகிதம் முறையே 3 : 2 : 1 ஆகும்.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **A** இன் அர்ப்பணிப்பு விகிதம் (sacrificing ratio) :

(1) $\frac{4}{6}$ (2) $\frac{2}{6}$ (3) $\frac{1}{6}$ (4) $\frac{3}{6}$

(02 புள்ளிகள்)

**1.7** தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** நிதிக் கூற்றுக்களின் மூன்று (03) பகுதிகளை (components) அடையாளங் காண்க. (03 புள்ளிகள்)

**1.8** கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட டீன் (தனியார்) கம்பனியி**லிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

| | |
|---|---|
| நாளொன்றுக்கான சாதாரண வேலை நேரம் | 8 மணித்தியாலங்கள் |
| மணித்தியாலமொன்றுக்கான அடிப்படைக் கொடுப்பனவு வீதம் | ரூபா 300/- |
| 1 அலகை உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நியம நேரம் | 2.5 நிமிடங்கள் |
| மிகையூதியம் | அடிப்படை வீதத்தில், சேமிக்கப்படும் நேரத்தில் 80%. |

பணியாளர் ஒருவர் நாளொன்றுக்கு 252 அலகுகளை உற்பத்தி செய்வாராயின், அவரின் நாளொன்றிற்கான சம்பாத்தியத்தைக் (earning) கணிக்குக. (04 புள்ளிகள்)

**1.9** **கார்கோ லொஜிஸ்ரிக்ஸ் பீ.எல்.சீ.** ஆனது 2,000,000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூபா 5/- விலையில் விநியோகிப்பதற்காக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதன் பொருட்டு 4,000,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. அதற்கிணங்க, 2 : 1 என்ற விகிதத்தில் பங்குகளை ஒதுக்கீடு செய்வதற்கும் விண்ணப்பங்களுடன் கிடைக்கப்பெற்ற மேலதிக பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கும் பணிப்பாளர்கள் தீர்மானித்திருந்தனர்.

காசுப் பதிவுகள் உள்ளிட்ட மேற்படி ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குக.

(03 புள்ளிகள்)

**1.10** கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின் பொருள் A** தொடர்பில் கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

வருடாந்தக் கேள்வி : 16,000 அலகுகள்

அலகொன்றின் கொள்வனவு விலை : ரூபா 20/-

கட்டளை ஒன்றிற்கான கட்டளையிடல் கிரயம் : ரூபா 10/-

அலகொனறின் வருடாந்த நிறுத்திவைத்தல் கிரயம் : கொள்வனவு விலையில் 10%.

*நீங்கள் கீழ்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்,*

சிக்கனக் கட்டளைக் கணியம் : $\sqrt{\frac{2DC_0}{C_h}}$

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **பொருள் A** இன் சிக்கனக் கட்டளைக் கணியத்தைக் (EOQ) கணிக்குக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

கீழ்வரும் தகவல்கள் **ஆலோகா** என்பவருக்குச் சொந்தமான **ஆலோகா என்டபிரைஸ்** என்ற ஒரு தனியுடமை வியாபாரத்தின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. **ஆலோகா என்டபிரைஸ்** ஆனது மின்விளக்குகளை இறக்குமதி செய்து உள்நாட்டில் அவற்றை விநியோகம் செய்கின்ற வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

2022 சனவரி 01 இல் **ஆலோகா என்டபிரைஸ்** இன் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| கட்டடங்கள் | 25,000 | |
| தளபாடங்கள் | 2,500 | |
| திரள் தேய்மானம் - கட்டடங்கள் | | 5,000 |
| திரள் தேய்மானம் - தளபாடங்கள் | | 500 |
| தொக்குகள் | 5,620 | |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 1,580 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 2,320 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | 2,980 | |
| வியாபாரக் கடன்பட்டோர் | 1,300 | |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | | 1,690 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், என்டபிரைஸ் ஆனது கடனடிப்படையில் ரூபா 5,380,000/- பெறுமதியான மின்விளக்குகளை இறக்குமதி செய்திருந்தது. அந்த இறக்குமதி செய்யப்பட்ட மின் விளக்குகளுக்கான தொகையில் 80% ஆனவை கடன்கொடுத்தோரின் ஆரம்ப மீதியுடன் சேர்த்து நடப்பு ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

(2) **ஆலோகா** ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட விற்பனைகள் மீது 20% மொத்த இலாப எல்லையைப் பேணுகிறார்.

(3) 60% ஆன விற்பனைகள் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் மீதியானது கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விற்பனையில் 60% ஆன வருமதிகள் ஆண்டின் காலப்பகுதியிலேயே கிடைக்கப் பெற்றன. ஆண்டின் ஆரம்பத்தில் கடன்பட்டோரிடமிருந்து வர வேண்டியிருந்த தொகையும்கூட ஆண்டின் காலப்பகுதியில் முழுமையாக கிடைக்கப் பெற்றது.

(4) 2022 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான தொக்குகள் ரூபா 3,580,000/- என மதிப்பிடப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2022 சனவரி 01 இல் **ஆலோகா என்டபிரைஸ்** இன் மூலதனத்தை (உரிமையாண்மை) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) **ஆலோகா என்டபிரைஸ்** இன் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனையைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(c) **ஆலோகா என்டபிரைஸ்** இன் 2022 டிசெம்பர் 31 இலான கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(i) வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு. (03 புள்ளிகள்)

(ii) வியாபாரக் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**சுமுது, மலிந்து** மற்றும் **சமிந்து** ஆகியோர் இணைந்து 2021 சனவரி 01 ஆந் திகதி **SMC கன்ஸ்ரக்ஷன்** என்ற பங்குடமை வியாபாரத்தை ஆரம்பித்தனர். 2022 ஆம் ஆண்டிற்கான **SMC கன்ஸ்ரக்ஷன்** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) வியாபாரம் ஆரம்பிக்கப்படும்போது ஒவ்வொரு பங்காளராலும் உள்ளிடப்பட்ட மூலதனம் கீழ்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| **சுமுது** | 2,000,000 |
| **மலிந்து** | 1,500,000 |
| **சமிந்து** | 1,200,000 |

(2) கீழ்வரும் தகவல்கள் பங்குடமை உடன்படிக்கையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

- ஒவ்வொரு பங்காளரும் மாதாந்தச் சம்பளம் ரூபா 85,000/- பெற உரித்துடையவர்கள்.
- உரிய பங்காளர்களால் வியாபாரம் ஆரம்பிக்கப்படும்போது உள்ளிடப்பட்ட மூலதனத்திற்கு 12% வருடாந்த வட்டி செலுத்தப்பட வேண்டும்.
- பங்காளர்களால் வியாபாரத்திற்கு வழங்கப்படும் எந்தவொரு கடனுக்கும் 15% வருடாந்த வட்டி செலுத்தப்பட வேண்டும்.
- **சுமுது, மலிந்து** மற்றும் **சமிந்து** ஆகியோருக்கிடையில் இலாப /நட்டங்கள் முறையே 2:1:1 என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றன.

(3) **மலிந்து** வியாபாரத்திற்கு 2022 யூலை 01 இல் ரூபா 1,000,000/- கடனொன்றை வழங்கியுள்ளார். எவ்வாறாயினும், கடனுக்கான வட்டி பற்றி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(4) 2022 சனவரி 01 இல் பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் கீழ்வருமாறு :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| நடைமுறைக் கணக்குகள் : | | |
| **சுமுது** | 500 | |
| **மலிந்து** | | 1,500 |
| **சமிந்து** | 400 | |

(5) **SMC கன்ஸ்ரக்ஷன்** இன் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் ரூபா 23,200,000/- ஆகும். இலாபத்தைக் கணிக்கும்போது, பங்குடமையானது ஆண்டின்போது பங்காளர்களுக்கு உரித்துடைய சம்பளங்களை நிருவாகச் செலவுகளின் கீழ் தாக்கல் செய்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **SMC கன்ஸ்ரக்ஷன்** இன் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக :**

(a) இலாப அல்லது நட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு (Appropriation Account). (06 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் (Current Accounts). (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**அப்பாவிகளை அரவணைத்தல்** என்பது வீதியில் சுற்றித் திரியும் விலங்குகளுக்கு உதவுகின்ற ஓர் இலாப நோக்கற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொள்ளல், கொடுத்தல் கணக்கு (Receipts and Payments Account) கீழ்வருமாறு :

**2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொள்ளல், கொடுத்தல் கணக்கு** *(ரூபா '000)*

| | | | |
|---|---|---|---|
| 2022 சனவரி 01 இல் மீதி மு.கொ.வ. | 56 | ஊழியர் சம்பளச் செலவுகள் | 1,620 |
| நன்கொடைகள் | 2,950 | தடுப்பு மருந்துச் செலவுகள் | 894 |
| அங்கத்துவக் கட்டணப் பெறுவனவுகள் | 206 | மருந்துகள் | 224 |
| நினைவுப் பொருள்களின் விற்பனை மூலமான வருமானம் | 1,295 | வாடகை, மின்சாரம், நீர் | 216 |
| | | VET நடமாடும் சேவைக்கான எரிபொருள் | 348 |
| | | உபகரண வாடகை | 412 |
| | | 2022 டிசெம்பர் 31 இல் மீதி கீ.கொ.செ. | 793 |
| | **4,507** | | **4,507** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) இந்நிறுவனம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக 205 கால்நடை மருத்துவர்களைக் கொண்டிருப்பதுடன் அவர்கள் ஆண்டிற்கு ரூபா 1,000/- என்ற பெயரளவு அங்கத்துவக் கட்டணங்களைச் செலுத்துகின்றனர்.

- ஆண்டின் காலப்பகுதியில் அங்கத்துவக் கட்டணப் பெறுவனவுகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| தொடர்புடைய ஆண்டு | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கானது | 4 |
| 2022 ஆம் ஆண்டிற்கானது | 199 |
| 2023 ஆம் ஆண்டிற்கானது | 3 |

- 2021 டிசெம்பர் 31 இல் பெறப்பட வேண்டியிருந்த அங்கத்துவக் கட்டணங்கள் 2022 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் முழுமையாகக் கிடைக்கப் பெற்றதுடன் 2021 டிசெம்பர் 31 இல் அங்கத்தவர்களால் எந்தவொரு அங்கத்துவக் கட்டணமும் முற்கொடுப்பனவாகச் செலுத்தப்படவில்லை.

(2) ஆண்டின் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற சகல நன்கொடைகளும் நடப்பு ஆண்டு 2022 உடன் தொடர்புடையவை ஆகும்.

(3) நிறுவனமானது 2018 யூலை 01 இல் ரூபா 3,250,000/- கிரயத்தில் கொள்வனவு செய்த வாகனமொன்றைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறது. இது VET நடமாடும் சேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாகனம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்படுகிறது.

(4) 2022 டிசெம்பர் மாதத்திற்கான மின்சார மற்றும் நீர்க் கட்டணமாக ரூபா 36,000/- கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) வருமான, செலவினக் கணக்கு. (06 புள்ளிகள்)

(b) அங்கத்துவக் கட்டணக் கணக்கு. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **வரையறுக்கப்பட்ட ரஷ்மி கம்பனி** பொம்மைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் 2022 பெப்ரவரி மாதத்திற்கான அதன் மூலப்பொருள் **X** தொடர்பில் தரப்பட்டுள்ளன :

- பெப்ரவரி 01 - ஆரம்ப இருப்பு மீதி 800 அலகுகள் - அலகொன்று ரூபா 10.75.
- பெப்ரவரி 05 - 120 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன - அலகொன்று ரூபா 12/-.
- பெப்ரவரி 12 - 200 அலகுகள் விநியோகிக்கப்பட்டன.
- பெப்ரவரி 17 - 150 அலகுகள் விநியோகிக்கப்பட்டன.
- பெப்ரவரி 22 - 300 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன - அலகொன்று ரூபா 15/-.
- பெப்ரவரி 28 - 200 அலகுகள் விநியோகிக்கப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

நிறையேற்றிய சராசரிக் கிரய (AVCO) முறையின் கீழ், 2022 பெப்ரவரி மாதத்திற்காக மூலப்பொருள் **X** இற்கான களஞ்சியப் பேரேட்டைத் (Stores Ledger) **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(B) ***மிஹிரி*** (ஊழியர் இல. 7890) என்பவர் **வரையறுக்கப்பட்ட ரஷ்மி கம்பனியின்** உற்பத்திப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு மேற்பார்வையாளர் ஆவார்.

கீழ்வரும் தகவல்கள் 2022 டிசெம்பர் மாதத்திற்கான அவரது சம்பளத்துடன் தொடர்புடையவை :

(1) ***மிஹிரி***யின் அடிப்படைச் சம்பளம் ரூபா 85,000/-. இது 2022 டிசெம்பர் மாதத்திலிருந்து கிடைக்கப்பெற்ற, அடிப்படைச் சம்பளத்தில் 10% மான சம்பள ஏற்றத்தையும் உள்ளடக்குகிறது.

(2) அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, வாரமொன்றுக்கு ரூபா 2,500/- உணவுப் படியும் (food allowance) மாதமொன்றுக்கு ரூபா 10,000/- சீருடைப் படியும் (uniform allowance) அவருக்கு உரித்துடையன.

(3) மாதத்தில் அவர் ரூபா 15,500/- இனை மேலதிக நேரக் கொடுப்பனவாகச் சம்பாதித்துள்ளார்.

(4) ***மிஹிரி*** 2022 நவெம்பர் மாதத்தில் கம்பனியிடமிருந்து கடனொன்றைப் பெற்றுக் கொண்டுள்ள துடன் கடன் மீதான டிசெம்பர் மாதத்திற்கான மூலதன மீள்கொடுப்பனவும் வட்டியும் முறையே ரூபா 12,000/- உம் ரூபா 1,800/- உம் ஆகும். கடனைப் பெற்றுக்கொண்ட போது, அக்கடனை தனது சம்பளத்திலிருந்து மாதாந்தத் தவணைகளில் அறவீடு செய்வதற்கான தனது சம்மதத்தைத் தெரிவித்திருந்தார்.

(5) EPF இற்கான தொழில்தருநரினதும் ஊழியரினதும் பங்களிப்புகள் முறையே மொத்தச் சம்பளத்தில் 12% உம் 8% உம் ஆகும். ETF இற்கான தொழில்தருநரின் பங்களிப்பு மொத்தச் சம்பளத்தில் 3% ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 டிசெம்பர் மாதத்திற்கான ***மிஹிரி***யின் நிகரச் சம்பளத்தைக் (net salary) **கணிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

பைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட ரம்ஷி கம்பனி** இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் (தைத்தல் மற்றும் இறுதிப்படுத்தல்) ஒரு சேவைப் பிரிவையும் (தொழினுட்பம்) கொண்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 30 உடன் முடிவடையும் மாதத்திற்கான மேந்தலைகள் தொடர்பான கீழ்வரும் பாதிடப்பட்ட தரவுகள் தரப்பட்டுள்ளன :

| அடிப்படை | பிரிவுகள் | | |
|---|---|---|---|
| | உற்பத்தி | | சேவை |
| | தைத்தல் | இறுதிப்படுத்தல் | தொழினுட்பம் |
| நேரில் பொருள் (ரூபா) | 325,000 | 450,000 | 75,000 |
| நேரில் கூலி (ரூபா) | 390,000 | 500,000 | 125,000 |
| பயன்படுத்தப்பட்ட தரைப் பரப்பு (சதுர அடி) | 1,600 | 720 | 480 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 150 | 50 | 50 |
| இயந்திரப் பெறுமதிகள் (ரூபா) | 1,800,000 | 1,200,000 | 600,000 |
| மின்சாரப் பாவனை (கிலோவாற்று) | 1,200 | 600 | 200 |
| நேர் கூலி மணித்தியாலம் | 12,000 | 8,000 | - |
| கிரயப் பகிர்வு – தொழினுட்பம் | 55% | 45% | - |

2023 ஏப்ரல் மாதத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம் கீழே தரப்பட்டுள்ளது :

| கிரய உருப்படி | கிரயம் (ரூபா) |
|---|---|
| ஊழியர் சேமநலன் | 250,000 |
| இயந்திரத் தேய்மானம் | 720,000 |
| மின்சாரம் | 120,000 |
| வாடகை | 280,000 |
| இயந்திரப் பராமரிப்பு | 360,000 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றொன்றினைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) ஒவ்வொரு உற்பத்திப் பிரிவினதும் நேர் கூலி மணித்தியாலமொன்றிற்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2022 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட சீ – லங்கா (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | | 26,000,000 |
| 2021 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | 2,836,000 | |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி - ரூபா 10 மில்லியன்) | 20,000,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 12,000,000 | |
| அலுவலக உபகரணம் | 2,550,000 | |
| **திரள் தேய்மானம் - 2021 ஏப்ரல் 01 இல் :** | | |
| கட்டடம் | | 2,000,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 4,000,000 |
| அலுவலக உபகரணம் | | 1,020,000 |
| 2022 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 3,587,000 | |
| வங்கியிலுள்ள காசு | 1,274,000 | |
| வியாபார வருமதிகள் | 6,037,000 | |
| வியாபார சென்மதிகள் | | 1,225,000 |
| வங்கிக் கடன் | | 4,650,000 |
| விற்பனைகள் | | 33,540,000 |
| விற்பனைக் கிரயம் | 13,416,000 | |
| செலுத்திய அலுவலக வாடகை | 333,000 | |
| எரிபொருள் செலவினங்கள் | 732,000 | |
| விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் | 725,000 | |
| விற்பனைப் பணிசை (தரகு) செலவினங்கள் | 1,006,000 | |
| நீரும் மின்சாரமும் | 432,000 | |
| அலுவலகப் பராமரிப்புச் செலவினங்கள் | 365,000 | |
| சம்பளங்கள், EPF, ETF | 9,084,000 | |
| வங்கிக் கட்டணங்கள் | 12,000 | |
| வங்கிக் கடன் வட்டி | 1,076,000 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 89,000 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2021 ஏப்ரல் 01 இல் | | 208,000 |
| செலுத்திய வருமான வரி | 625,000 | |
| செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF | | 11,000 |
| மோட்டார் வாகன விற்பனை | | 3,525,000 |
| | **76,179,000** | **76,179,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி ரூபா 3,500,000/-.

(2) 2022 சனவரி 01 இல், கம்பனியானது ரூபா 37,000/- மாதாந்த வாடகையில் ஒரு புதிய விற்பனை அலுவலகத்தைப் பெற்றுக்கொண்டது. வாடகை உடன்படிக்கையின்படி, கம்பனியானது 6 மாத வாடகையை முற்பணமாகச் செலுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க, இந்தக் கட்டடத்திற்காக ஆண்டின் காலப்பகுதியில் 9 மாத வாடகைக்குச் சமனான ஒரு தொகையை கம்பனி செலுத்தியிருந்தது.

(3) 2020 சனவரி 01 இல் ரூபா 4,000,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியின் ஒரு வாகனம் 2021 டிசெம்பர் 31 இல் ரூபா 3,525,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வருமானமானது மோட்டார் வாகன விற்பனைக் கணக்கில் செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டது. இதைத் தவிர மோட்டார் வாகன விற்பனை தொடர்பில் வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| கட்டடம் | 25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 5 ஆண்டுகள் |

(5) 2022 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 30,000/- கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்.

(6) வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான வருமான வரிப் பரிப்பு ரூபா 827,000/- ஆகக் கணிப்பிடப் பட்டதுடன் இது கணக்கிற் கொள்ளப்படவில்லை. ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி காலாண்டு வருமான வரித் தவணைக் கட்டணங்களாக ரூபா 625,000/- இனைச் செலுத்தியிருந்தது.

(7) வியாபார வருமதிகளை மீளாய்வு செய்ததன் பின்னர், 2022 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 5% ஐயுறவுக் கடன் ஏற்பாட்டைச் செய்வதற்கு முகாமை தீர்மானித்தது.

(8) 2022 மார்ச் 20 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் கைக்கொள் இலாபத்திலிருந்து பொது ஒதுக்கக் கணக்கிற்கு ரூபா 350,000/- தொகையை மாற்றுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது.

(9) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2022 யூன் 10 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப் பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட சீ – லங்கா (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (13 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |